DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP .No. | : | 48/2019 |
| Deposition of Witness for | : | P.W.1 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | சண்முகம் |
| Father's Name | : | |
| Village | : | முதுகுளத்தூர் |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.11.2025

**முதல் விசாரணை:**

நான் மனுதாரர். மனுதாரர் நிறுவனத்தின் ஓட்டுனராக பணிபுரிகிறேன். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. முதல் தகவல் அறிக்கை உண்மை நகல் ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. TN 63 N 1271 பேருந்திற்கு ஏற்பட்ட சேதத்தை சரி செய்ததற்கான பில்கள் அசல் ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3. TN 60 E 1993 வாகனத்திற்கான ஆர்.சி புக் உண்மை நகல் ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
4. TN 60 E 1993 வாகனத்திற்கான இன்சூர்ன்ஸ் உண்மை நகல் ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
5. TN 63 N 1271 பேருந்திற்கான மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை உண்மை நகல் ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை:

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து எங்கள் அலுவலத்திற்கு அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை, எனது அலுவலகத்தில் இருந்து என்னை சாட்சியம் அளிக்க அனுப்பிவைத்தார்கள். எனது நிறுவன மேலாளர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சி அளிக்க வந்தேன் என்றால் சரிதான். நான் விபத்து வாகனத்தின் நடத்துனரா அல்லது ஓட்டுனரா என்றால் ஓட்டுனர் ஆவேன். விபத்து நடந்த தேதி என்ன என்றால் 19.01.2015 ஆகும். விபத்தின் போது வாகனத்தை எந்த திசையில் இருந்து எந்த திசையை நோக்கி சென்றேன் என்றால் காமன்கோட்டையில் இருந்து இராமநாதபுரம் நோக்கி சென்றேன். விபத்தை ஏற்படுத்திய வாகம் என்ன என்றால் 407 வேன் ஆகும். 407 வாகனம் எங்களுடை அரசு பேருந்தின் பின்புறம் மோதியதா அல்லது உரசி சென்றதா என்றால் மோதியது. இந்த விபத்தில் பயணிகளுக்கு காயம் ஏற்படவில்லை என்றால் சரிதான்.

2. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள உதிரிபாகங்கள் வாங்குவதற்கான பில்கள் யாரிடம் வாங்கியது என்பதற்கான விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அரசு பேருந்திற்கு எவ்வளவு செலவு ஆன விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாகனத்தை அதிவேகமாக சாலையில் ஓட்டிச் சென்று எந்த வித சமிக்கையும் செல்லாமல் திடிரென அரசு பேருந்தை சாலையில் நிறுத்தியதால் இந்த விபத்து ஏற்பட்டு என்று சொன்னால் அது சரியல்ல. 407 வாகத்தை ஓட்டியவர் பெயர் மற்றும் அவருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளதா விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த விபத்தில் யார் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 407 ஓட்டுனர் மீது . இந்த விபத்துக்கு காரணம் என்னுடைய கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் எனது அரசு பேருந்தை மிதமான வேகத்தில ஓட்டி இருந்தால் இந்த விபத்தை தடுத்திருக்கலாம் என்று சொன்னால் சரியல்ல. நான் எனது நிறுவனத்தின் ஓட்டுனராக பணிபுரிவதால் நிறுவனத்திற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை .

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.